30-06-2025.

S.C.No.11/2021

Crl.M.P.4465/2023 நாள் 11.12.2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.6 பூபதி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை -

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் கொழுந்தன். நான் விவசாய கூலி வேலை பார்த்து வருகிறேன். காலையில் வேலைக்கு 7 மணிக்கு போய்விட்டு மதியம் 2 மணிக்கு வருவேன். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், என் கணவர் மற்றும் உறவினர்கள் எதிரி வீட்டுக்கு சென்று சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. இறந்த கிருஷ்ணமூர்த்திக்கும் எதிரிக்கும் எங்கள் ஊர் பொது இடத்தில் பகவதியம்மன்கோவிலுக்குஅருகே வாய்த்தகராறு நடந்தது என்றால் சரியல்ல. வாய்த்தகராறு நடந்தபோதே கத்தியை எடுத்து குத்திவிட்டார். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் சம்பவத்தை பார்க்காமலேயே பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.30 16:24:16 +0530

Principal District Judge,
Dindigul.